புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
நீர்நிலவியலாளர் -11 அலுவலகம்
மாநில நிலத்தடி நீர் பிரிவு மற்றும் மண்வள பாதுகாப்பு
வேளாண் கூட்டுவளாகம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 605009.
=*****=

எண் : 02/நீ.நி/மாநிநீபி/விளம்பரம்/2020-21 தேதி :

## அறிவிக்கை

புதுச்சேரி அரசு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலமாக, புதுச்சேரி பிராந்தியத்தில் பாசன வசதியை மேம்படுத்துவதற்கும், நீர் விரையமின்றி சிக்கனமான முறையில் நிலத்தடி நீரை கையாள்வதற்கும், கீழ்க்கண்ட திட்டக்கூறுகளுக்கு மானியம் அளிக்கும் பொருட்டு **பொது மற்றும் அட்டவணை இன விவசாயிகளிடமிருந்து 2020-21 ம் நிதி ஆண்டிற்கான விண்ணப்பங்கள்** தகுதி வாய்ந்த விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர்களுக்கான தகுதி நிலையாக, கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள எக்டேர்களுக்குக் குறையாமல் புதுச்சேரி பிராந்தியத்தில் பயிர் செய்யும் சொந்தமான விவசாய நிலங்கள் இருத்தல் வேண்டும்.

| வரிசை எண் | திட்ட கூற்றின் பெயர் | பொது விவசாயிகள் | | | அட்டவணை இன விவசாயிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்ச நிலம் அளவு | மானிய உதவி | | குறைந்த பட்ச நிலம் அளவு | மானிய உதவி | |
| | | எக்-ஆர்-சா | விழுக்காடு | அதிகபட்ச தொகை உருபாயில் | எக்-ஆர்-சா | விழுக் காடு | அதிகபட்ச தொகை உருபாயில் |
| 1. | குழாய் கிணறு அமைத்தல் | 0 - 60 - 00 | 65% | 1,50,000/- | 0 - 40 - 00 | 90% | 1,80,000/- |
| 2. | நீர் மூழ்கி மோட்டார் மற்றும் உபகரணங்கள் பொருத்துதல் | 0 - 60 - 00 | 65% | 50,000/- | 0 - 40 - 00 | 90% | 60,000/- |
| 3. | ஐ.எஸ்.ஐ தரமுள்ள பி.வி.சி நிலத்தடி நீர் பாசன குழாய் அமைத்தல் | இல்லை | 75% | 30,000/- | இல்லை | 100% | 30,000/- |
| 4. | தெளிப்பு நீர் / சொட்டு நீர் பாசன கருவிகள் அமைத்தல் | **குறு, சிறு, அட்டவணை, பழங்குடி மற்றும் மகளிர் இன விவசாயிகள்** | | | **இதர விவசாயிகள்** | | |
| | | இல்லை | எக்டேருக்கு 90% | எக்டேருக்கு 25,000/- | இல்லை | எக்டேருக்கு 70% | எக்டேருக்கு 25,000/- |

3. குழாய் கிணறு / நீர் மூழ்கி மோட்டார் ஆகியவைகளுக்கான மானியம் பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச அளவுள்ள நிலங்கள், குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளாவது சொந்தமாக அவர் பெயரில் இருந்திருக்க வேண்டும். மேலும், மேற்குறிப்பிட்ட குழாய் கிணறு / நீர் மூழ்கி மோட்டார் ஆகியவைகளை **அமைத்து முடித்த பின் 90 (தொண்ணூறு) நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.** நீர் மூழ்கி மோட்டார் பொருத்தும் போது, தங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள குதிரை திறனுக்கு மிகாமல் ஐ.எஸ்.ஐ தரமுள்ள நீர் மூழ்கி மோட்டாரை பொருத்த வேண்டும். அத்துடன், தங்களுக்கு சொந்தமான **குழாய் கிணற்றை, புதுச்சேரி நிலத்தடி நீர் அதிகார அமைப்பில் கட்டாயம் பதிவு செய்திருக்க வேண்டும்.**

4. மேற்கண்ட வரையறைகளை / நிபந்தனைகளை நிறைவு செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு கீழ் கையொப்பமிட்டவரை அணுகியோ அல்லது இத்துறையின் இணைய தளமான **www.agri.py.gov.in** - லோ தெரிந்து கொள்ளவும்.

27/6/2021

(ச.மனோகர்)
நீர் நிலவியலாளர்
மாநில நிலத்தடி நீர் பிரிவு மற்றும் மண்வள பாதுகாப்பு

புதுச்சேரி அரசு வேளாண் துறை
DEPARTMENT OF AGRICULTURE
http://agri.puducherry.gov.in

The web master, DA